# 7 மெட்ரோ ரயில் நிலையங்களில் மாதாந்திர வாகன நிறுத்த கட்டணம் உயர்வு

சென்னை, ஜூன் 8: திருமங்கலம், கிண்டி உள்பட 7 மெட்ரோ ரயில் நிலையங்களில் மாதாந்திர வாகன நிறுத்த (பார்க்கிங்) கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

சென்னையில் 45 கி.மீ. தொலைவுக்கான முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் முடிவடைந்து, விமானநிலையம்-வண்ணாரப்பேட்டை வரை முதல் வழித்தடத்திலும், சென்ட்ரல்-பரங்கிமலை வரை இரண்டாவது வழித்தடத்திலும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதையடுத்து, வண்ணாரப்பேட்டை முதல் விம்கோ நகர் வரை விரிவாக்கப் பணி வேகமாக நடைபெற்று வருகிறது.

முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டத்தில், 32 ரயில் நிலையங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் 30 ரயில் நிலையங்களில் கட்டணம் செலுத்தி வாகனம் நிறுத்தும் வசதி செய்யப்பட்டுள்ளன. இரு சக்கர, மூன்று சக்கர, நான்கு சக்கர வாகனங்களை நிறுத்தி கொள்ளலாம். மாதாந்திர, தினசரி கட்டண அடிப்படையில் வாகனங்களை நிறுத்திக் கொள்ளலாம். தற்போது மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள வாகன நிறுத்தங்களுக்கு வாடிக்கையாளர்கள் மத்தியில் வரவேற்பு அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், திருமங்கலம், கிண்டி, மீனம்பாக்கம், அசோக் நகர், மண்ணடி, அண்ணா நகர் கிழக்கு மற்றும் நங்கநல்லூர் ஆகிய 7 மெட்ரோ ரயில் நிலையங்களில் மட்டும் மாதாந்திர வாகன நிறுத்த கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. அதன்படி, இந்த 7 மெட்ரோ ரயில் நிலையங்களில் 12 மணி நேரத்துக்கு இருசக்கர வாகனம் நிறுத்துவதற்கான மாதாந்திர கட்டணம் ரூ.250 -இல் இருந்து ரூ.500 -ஆக உயர்த்தப்பட்டுள்ளது. நான்கு சக்கர வாகனத்துக்கான மாதாந்திர கட்டணம் ரூ.500 -இல் இருந்து ரூ.1,000 -ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இதேபோல, 24 மணி நேரத்துக்கு இருசக்கர வாகனம் நிறுத்துவதற்கான மாதாந்திர கட்டணம் ரூ.1,000 இல் இருந்து ரூ.1,500 ஆகவும், கார் நிறுத்தக் கட்டணம் ரூ.2,000 -இல் இருந்து ரூ.3,000 -ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், விமான நிலைய மெட்ரோ ரயில் நிலையத்தில் இரு சக்கர வாகனத்துக்கான மாதாந்திர கட்டணம் ரூ.500 -இல் இருந்து ரூ.1,000 -ஆக உயர்ந்துள்ளது.

இதேபோல, வடபழனி மெட்ரோ ரயில் நிலையத்தில் இருசக்கர வாகனம் நிறுத்தத்துக்கு 6 மணி நேரத்துக்கு ரூ.20 -ஆக இருந்த கட்டணம் ரூ.40 -ஆகவும், 6 முதல் 12 மணி நேரத்துக்கு ரூ.40 -இல் இருந்து ரூ.60 -ஆகவும், 12 மணி நேரத்துக்கு மேல் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு கட்டணம் ரூ.60 -இல் இருந்து ரூ.80 -ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது: இந்த ரயில் நிலையங்களின் வாகன நிறுத்துமிடம் தினசரி காலையில் வேகமாக நிரம்பி விடுகிறது. தாமதமாக வரும் பயணிகளுக்கு வாகன நிறுத்துமிடம் கிடைப்பது இல்லை. இதனால், வாக்குவாதத்தில் ஈடுபடுகிறார்கள்.

குறிப்பிட்ட இடத்தில் அனைவருக்கும் வாகனத்தை நிறுத்த இடம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. எனவே, இது பற்றி ஆலோசித்து, கட்டணத்தை உயர்த்துவது மூலமாக இடம் நெரிசலைக் குறைக்கவும், தேவையை எளிதாக நிறைவேற்றவும் முடியும் என்றார் அவர்.

சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் வாகனம் நிறுத்தம் மூலமாக, மாதத்துக்கு சுமார் ரூ.58 லட்சம் வரை வருவாய் ஈட்டப்படுகிறது. ஒரு நாளைக்கு மட்டும் ரூ.1.92 லட்சம் வருவாய் கிடைப்பது குறிப்பிடத்தக்கது.